போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

I-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்.

SUPPLEMENT TO PART I OF THE FORT ST. GEORGE GAZETTE,

MARCH 21, 1922.

நெ. 12.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1922-௵ மார்ச்௴ 21௳. [விலை, 6 பை

கவர்ன்மென்ட் விளம்பரங்களின் தமிழ்மொழிபெயர்ப்பு.

Tamil Translations of Notifications by Government.

பைனான்ஸ் டிபார்ட்மென்ட்.

(மரீன்.)

விளம்பரங்கள்.

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ், 1922-௵ பெப்ரவரி௴ 18௳.

நெ. 11.—(1885-௵த்து 3-வது ஆக்டாகிய) வெளி ரேவுகளில் எற்றிறக்குமதிக் கட்டணங்களைக் குறித்த 1885-௵த்திய சென்னபட்டணத்து ஆக்ட் 1-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளின்படி, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - இந்த விளம்பரத்தின் தேதியன்றைக்கும் அந்தத் தேதியிலிருந்தும் ஷை ஆக்டானது ராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த பாம்பன் ரேவில் செலாவணியாக வேண்டுமென்று இதனால் கட்டளையிடுகிறார்கள்.

நெ. 12.—சென்னபட்டணம் 1914-௵த்து 8-வது ஆக்ட், 1916-௵த்து 1-வது ஆக்ட், 1919-௵த்து 5-வது ஆக்ட் ஆகிய இவைகளினால் திருத்தப்பட்டபடிக்குள்ள (1885-௵த்து 3-வது ஆக்டாகிய) வெளி ரேவுகளில் எற்றிறக்குமதிக் கட்டணங்களைக் குறித்த 1885-௵த்திய சென்னபட்டணத்து ஆக்ட் 4-வது, 6-வது பிரிவுகளினால் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைக்கொண்டு ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள்—

(i) ராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த பாம்பன் ரேவின் எல்லைகளுக்குள் நங்கூரம் போட்டு நிற்கிற அல்லது இருக்கிற யாதொரு மரக்கலத்திலிருந்து இறக்கப்படும் அல்லது அதில் எற்றப்படும் சகல சரக்குகளுக்கும் இதனுடன் சேர்த்திருக்கும் ஷெட்யூலில் கண்ட வீதங்களின்படி எற்றிறக்குமதிக் கட்டணங்கள் விதிக்கப்படவேணடுமென்று களிகூர்ந்து நிஷ்கரிஷை செய்கிறார்கள் ;

(ii) இன்ன விதமாய் ஷை கட்டணங்கள் விதிக்கப்படவேண்டுமென்பதைக்குறித்தும் இன்ன காலத்தில் அவை செலுத்தப்படவேண்டுமென்பதைக்குறித்தும் ஒழுங்கேற்படுத்துவதற்காக களிகூர்ந்து அடியிற்கண்ட விதிகள் செய்கிறார்கள் ;

(iii) மேலும், ஷை வீதங்களின்படிக்கான கட்டணங்கள் 1922-௵ மார்ச்௴ 22௳யன்றைக்கும் அதற்குப் பிறகும் செலுத்தப்படத்தக்கவையாகுமென்று ஷை 1885-௵த்து 3-வது ஆக்ட் 5-வது பிரிவின்படி களிகூர்ந்து பின்னும் அறிக்கை செய்கிறார்கள்.

ஷெட்யூல்.

சாமான்கள்.	கட்டணம் இவ்வளவுக் கென்பது.	ஏற்றிறக்குமதித் தீர்வை களின் வீதம்.
விலக்கரி ...	... 20 ஹண்டர்ட் வெய்ட் கொண்ட டன்.	ரூ. 0 12 0
மற்ற சகல சரக்குகள்	... ...	இலவசமாக.

குறிப்பு.—ஒரு டன்னுக்குக் குறைவான பாகங்கள் ஒரு டன்னாகக் கணக்கிடப்படும்.

விதிகள்.

(1) பாம்பன் ரேவுக்குள் ஏற்றுமதிசெய்ய உத்தேசிக்கப்படும் அல்லது (மரக்கலத்திலிருந்து) இறககப்படும சகல சரக்குகளையும், இந்த ஆக்டின்படி செலுத்தப்படத்தக்க கட்டணங்களை நிஷ்கரிஷை செய்வதற்காக போர்ட் ஆபிஸர் ரேவு ஆபிஸில் நோடிஸ் ஒட்டி அதன் மூலமாய் அப்போதைக்கப்போது ஏற்படுத்தக்கூடிய இடம் அல்லது இடங்களில் வைக்கவேண்டும்.

(2) ஏற்றுமதி செய்ய உத்தேசிக்கப்படும் சகல சரக்குகளும் ஏற்றுமதி விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் மதிப்பிடப்படும்; ஷை சரக்குகளை மரக்கலத்தில் ஏற்றுவதற்குமுன் தீர்வைகளைச் செலுத்தவேண்டும்.

(3) ரேவின் எல்லைகளுக்குள் இறக்கப்படும் சகல சரக்குகளும் இறக்குமதி விண்ணப்பம் செய்து கொள்வதன்மேல் மதிப்பிடப்படும்; ஷை சரக்குகளை அப்புறப்படுத்துவதற்குமுன் (தீர்வைத்) தொகையைச் செலுத்தவேண்டும்.

(4) ஒரு மரக்கலத்திலிருந்து மற்றொரு மரக்கலத்தில் ஏற்ற அனுமதி கொடுத்திருக்கும் சரக்குகளுக்கு, அவை வாஸ்தவத்தில் (கரையில்) இறக்கப்பட்டிருந்தால் என்ன தீர்வை செலுததவேண்டுமோ அதே தீர்வை செலுத்தவேண்டும்.

(5) கவர்ன்மென்ட் சாமான்களுககு, ஏற்றிறக்குமதித் தீர்வைகளில் மூன்றில் ஒரு பங்கு வீதம் தீர்வை விதித்து வாங்கப்படும்.

(6) கப்பலுக்கு வேண்டிய சாமான்கள்—கப்பலின் வாஸ்தவமான இசைப்புகள், கப்பலில் சரக்குகள் புரளாமலும் நனையாமலும் இருப்பதற்காக அடியில் போடும் கட்டைகள் முதலியவை, கப்பலில உபயோகித்துக்கொள்வதற்கான சாமக்கிரிகள் ஆகிய இவைகளுக்குத்தீர்வை செலுத்தவேண்டியதில்லை.

(7) சாமான் ஏற்றுமதிசெய்கிறவர்களால் தவிர்க்க முடியாத காரணங்களுக்காக மரக்கலங்களிலிருந்து திருப்பிவிடப்படும் சரக்குகள் சேதம் அடைந்திருந்தாலுஞ்சரி சேதமடைந்திராவிட்டாலுஞ்சரி, அவைகளை இலவசமாய் மறுபடியும் கரையில் இறக்குவதற்கு அனுமதி கொடுக்கப்படும்; ஆனால், மறுபடியும் கரையில் இறக்குவதற்கான (பாஸ்) அனுமதிச்சீட்டை மறுபடியும் கரையில் இறக்கும் காலத்திலிருந்து 24 மணி நேரத்துக்குள் சரியான அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டும்.

இதே சரக்குகளை மறுபடியும் கப்பலில் ஏற்றி அவைகளுக்கு மறுபடியும் ஏற்றுமதித் தீர்வைகள் செலுத்துவதாயிருக்கும் பட்சத்தில், அவைகளுக்காகச் செலுத்தப்பட்ட ஏற்றுமதித் தீர்வைகளைக்கூட வாபஸ் செய்துவிடலாம்.

(8) மரமத்து செய்யப்படும் யாதொரு மரக்கலத்திலிருந்து சிறிது காலத்துக்குக் கரையில் இறக்கப்பட்டு அந்த மரமத்து முடிந்ததும் மறுபடியும் கப்பலில் ஏற்றப்படும் சரக்குகளுக்கு ஏற்றிறக்குமதிக் கட்டணங்கள் எவையும் செலுத்தவேண்டியதில்லை.

(9) வாபஸ்செய்யும் விஷயங்கள் (1) (a) இறக்குமதிகள்—சரக்குகள் குறைவாய் இறக்கப்பட்டனவென்று ருஜு காட்டுவதன்மேல் மாத்திரமே இறக்குமதி விண்ணப்பங்களின் மேல் செலுத்தப்பட்ட தீர்வைத்தொகைகளை வாபஸ் செய்வதைப்பற்றி யோசிக்கப்படும்.

(b) ஏற்றுமதிகள்—சரக்குகள் குறைவாய் ஏற்றப்பட்டனவென்று ருஜு காட்டுவதன்மேல் மாத்திரமே ஏற்றுமதி விண்ணப்பங்களின்மேல் செலுத்தப்பட்ட தீர்வைத் தொகைகளை வாபஸ் செய்வதைப்பற்றி யோசிக்கப்படும்.

(2) கப்பலின்மேல் போக்கடிந்து போய்விட்ட சரக்குகள் விஷயமாய் ஏற்றுமதித் தீர்வைகளை வாபஸ்செய்யவேண்டுமென்று கொண்டுவரும் தாவா எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(3) குறைவாய் இறக்கப்பட்ட அல்லது ஏற்றப்பட்ட சரக்குகளுக்காகச் செலுத்தியிருக்கும் இறக்குமதி அல்லது ஏற்றுமதித் தீர்வைகளை வாபஸ் செயயவேண்டுமென்று கொண்டுவரும் தாவாக்கள் அந்தத் தீர்வைகள் செலுத்தப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாதம் கழிவதற்கு முன்பாகக் கொண்டுவரப்பட்டாலன்றி மற்றப்படி அவை வாபஸ் செய்யப்படமாட்டா.

(10) எந்த மரக்கலமாவது மிதவையாவது ரேவிலுள்ள யாதொரு பியர் என்னும் வாராவதி, (வார்ப்) செய்கரை, (ஜெட்டி) அணை அல்லது (க்வே) துறைமுக மேடை மேல் மோதி அதனால் அதற்குச் சேதம் உண்டாக்கினால், போர்ட் ஆபிஸரானவர் - உடனே கவர்ன்மெண்டாரின் ஹார்பர் என்ஜினீர் இலாகாவைச் சேர்ந்த யாதொரு எக்ஸிக்யுடிவ் என்ஜினீரையாகிலும் அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் இராவிட்டால் பப்ளிக் வொர்க்ஸ் இலாகாவைச் சேர்ந்தவராய் ஷை ரேவு எந்த டிவிஷனில் இருக்கிறதோ அந்த டிவிஷனின் எக்ஸிக்யுடிவ் என்ஜினீருடைய அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்துள்ள ஒரு உத்தியோகஸ்தரையாகிலும் மேலேகண்டபடி உண்டாக்கப்பட்ட சேதம் இவ்வளவென்று மதிப்பிடும்படி கேட்கவேண்டும். அந்தப்படி உண்டாக்கப்பட்ட சேதத்தின் மதிப்புத்தொகையைக் குறிப்பிட்டு அதைச் செலுத்தும்படி கேட்டு, மரக்கலத்தின் மாஸ்டர் அல்லது சொந்தக்காரருக்காவது மிதவையின் சொந்தக்காரருக்காவது நோடிஸ் ஒன்றைச் சேர்ப்பிக்கவேண்டும். சேதமானது ஒரு மிதவையினால் உண்டாக்கப்பட்டிருந்து அந்த மிதவையின் சொந்தக்காரர் இன்னாரென்று தெரியாமலாவது அவர் இன்னாரென்று நிச்சயித்தறிய முடியாமலாவது இருந்தால், ஷை டிமாண்ட் நோடிஸைப் பிரதேசரேவு ஆபிஸிலாகிலும் க்ஸ்டம் ஹௌஸிலாகிலும் நன்றாய்த் தெரியும்படியான ஒரு இடத்தில் மாட்டி வைக்கவேண்டும். ஷை டிமாண்ட் நோடிஸை சந்தர்ப்பத்துக்கேற்றபடி சேர்ப்பித்த பிறகாவது மாட்டின பிறகாவது ஒரு வாரத்துக்குள் ஷை தொகை செலுத்தப்படவேண்டும். போர்ட் ஆபிஸரானவர் சேதம் உண்டாக்குகிற மரக்கலம் அல்லது மிதவையை, அப்படி சேதம் உண்டாக்கப்பட்டவுடனே அந்த மரக்கலத்தைச் சேர்ந்ததாயுள்ள கப்பி, கயிறு, பாய், நங்கூரம் முதலிய சாமான்கள் சகிதமாகக் கைப்பற்றி, ஷை தொகை செலுத்தப்படுகிறவரையில் அதை மறியல் செய்துவைப்பது சட்டசம்மதமாகும். பணம் செலுத்தப்படுவதற்காக நிஷ்கரிஷை செய்து ஷை நோடிஸில் குறிப்பிடப்பட்டிருக்கும் வாரம் கழிந்த பிறகு மூன்று தினங்களுக்குள் கைப்பற்றினதற்காக அல்லது மறியல்செய்து வைத்திருந்ததற்காகப் பிடித்த செலவு சகிதமாய் ஷை தொகை செலுத்தப்படாவிட்டால், போர்ட் ஆபிஸரானவர்-அந்த மரக்கலத்தையாகிலும் கப்பி, கயிறு, பாய், நங்கூரம் முதலிய சாமான்களையாகிலும் மிதவையையாகிலும் விற்பனை செய்து, அப்படி விற்றுவந்த பணத்திலிருந்து சேதத்தின் மதிப்புத் தொகையையும், கைப்பற்றி மறியல்செய்து விற்பனை செய்ததன் பொருட்டு பிடித்த செலவுத்தொகையையும் கவர்ன்மெண்டுக்கு வரவுவைத்து, மிகுதி ஏதாவது இருந்தால் அதைச் சொந்தக்காரரோ அல்லது மாஸ்டரோ கேட்பதன்மேல் அவருக்குக் கொடுத்துவிடலாம்.

(11) இந்த விதிகளின்படி விதிக்கப்படும் கட்டணங்களினால், ரேவைச் சேர்ந்த நிலங்களிலாவது ரேவைச் சேர்ந்த சரக்கு போட்டுவைக்கும் கொட்டகைகளிலாவது சரக்குகளைச் சேர்த்து வைப்பதற்காக வாடகையாய் இப்போது வாங்கப்பட்டு வருகிற கட்டணங்களுக்கு எவ்விஷயத்திலும் பாதகம் உண்டாகமாட்டாது.

நெ. 13.—வெளிரேவுகளில் ஏற்றிறக்குமதிக் கட்டணங்களைக் குறித்த 1885-ம்௵த்திய சென்னபட்டணத்து ஆக்ட் 7-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - ஷை ஆக்டின்படி செலுத்தப்படத்தக்க சகல கட்டணங்களையும் விதிக்கவும் பெற்றுக்கொள்ளவும் அவைகளுக்காகக் கணக்கு சொல்லவும் பாம்பன் போர்ட் ஆபிஸரைக் களிகூர்ந்து நியமிக்கிறார்கள்.

டி. இ. மாயர்,
கவர்ன்மெண்ட் ஆக்டிங் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.